காஞ்சி, செங்கை, திருவள்ளூர் மாவட்டங்களில்

# 1.50 லட்சம் மாணவர்களுக்கு காலை உணவு

## மாவட்ட ஆட்சியர்கள், எம்.பி., எம்எல்ஏக்களும் பங்கேற்றனர்

**காஞ்சி/செங்கை/திருவள்ளூர்**
காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் முதல்வரின் காலை உணவுத் திட்டம் நேற்று தொடங்கியது. ஆட்சியர்கள் பள்ளி மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினர். இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 1,48,302 மாணவர்கள் காலை உணவு சாப்பிட்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள மேற்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி, மக்களவை உறுப்பினர் டி.ஆர்.பாலு ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திங்கட்கிழமையில் ரவை உப்புமா, செவ்வாய் கிழமையில் கோதுமை ரவை கிச்சடி, புதன்கிழமையில் வெண்பொங்கல், வியாழக்கிழமையில் அரிசி உப்புமா, வெள்ளிக்கிழமை ரவை காய்கறி கிச்சடி காய்கறி சாம்பாருடன் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீபெரும்புதூர் எம்எல்ஏ செல்வப் பெருந்தகை, ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி, ஸ்ரீபெரும்புதூர் வருவாய் கோட்டாட்சியர் ஜெ.சரவணக் கண்ணன், முதன்மைக் கல்வி அலுவலர் வெ.வெற்றிச் செல்வி உட்பட பலர் பங்கேற்று, மாணவர்களுடன் காலை உணவருந்தினர். இதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் 28,981 மாணவ-மாணவிகள் பயன்பெற்றனர்.

செங்கல்பட்டு சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட வெண்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், எம்எல்ஏ வரலட்சுமி முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் ஆ.ர.ராகுல்நாத் நேற்று தொடங்கி வைத்து மாணவ, மாணவிகளுடன் அமர்ந்து உணவருந்தினார். இதன்படி செங்கல்பட்டு மாவட்டத்தில் 54,431 மாணவ-மாணவிகள் பயன்பெற்றனர்.

இதேபோல், மாவட்டத்தில் உள்ள அந்தந்த சட்டப்பேரவை தொகுதிகளுக்கு உட்பட்ட அரசு பள்ளிகளில் எம்எல்ஏக்கள் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்து, மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினர்.

இந்த நிகழ்ச்சியில், உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்த் குமார் சிங், மாவட்ட வருவாய் அலுவலர் பி.சுபா நந்தினி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இந்து பாலா, மகளிர் திட்ட இயக்குநர் மணி, காட்டாங்கொளத்தூர் ஒன்றிய குழுத் தலைவர் உதயா, அரசு அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

திருத்தணி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட சீனிவாசபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், மாணவ மாணவிகளுக்கு உணவு பரிமாறி திட்டத்தை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, ஆட்சியர், அரக்கோணம் எம்.பி. ஜெகத்ரட்சகன், திருத்தணி எம்எல்ஏ சந்திரன் உள்ளிட்டோர், மாணவ- மாணவிகளுடன் அமர்ந்து உணவருந்தினர். இதன்படி திருவள்ளூர் மாவட்டத்தில் 64,890 மாணவ-மாணவிகள் பயன்பெற்றனர்.

இந்நிகழ்வுகளில், மகளிர் திட்டத்தின் திட்ட இயக்குநர் மலர்விழி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் ராஜவேல், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) ஸ்ரீதர், மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மோகனா, வட்டாட்சியர் மதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜேந்திர பாபு, சந்தானம் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைவர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, திருத்தணி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் தங்கதனம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# அண்ணா சாலை - ஜி.பி.சாலை சந்திப்பில் நாளை முதல் போக்குவரத்து மாற்றம்

## வாகன ஓட்டிகள் ஒத்துழைக்க வேண்டுகோள்

**சென்னை**
சென்னை அண்ணாசாலை மற்றும் ஜி.பி.சாலையில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் விதமாக நாளை (27-ம் தேதி) முதல் போக்குவரத்து மாற்றம் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதுகுறித்து பெருநகர சென்னை போக்குவரத்து காவல் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வெஸ்ட் காட் சாலையில் இருந்துவரும் மாநகர பேருந்துகள், கனரக வாகனங்கள் மற்றும் இதர வணிக வாகனங்கள் வரும் 27-ம் தேதி முதல் ஜி.பி.சாலை வழியாக அண்ணாசாலைக்கு செல்ல தடை செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனங்கள் ராயப்பேட்டை மணிக்கூண்டு அருகே திருப்பி விடப்பட்டு, வைட்ஸ் ரோடு மற்றும் ஸ்மித் சாலை வழியாக அண்ணாசாலைக்கு சென்றடையும். இருசக்கர வாகனங்கள் வழக்கம்போல ஜி.பி. சாலை வழியாகவே அண்ணா சாலைக்கு செல்லலாம்.

அதேபோல, ஜி.பி.சாலை வழியாக அண்ணாசாலைக்கு அனுமதிக்கப்படும் இருசக்கர வாகனங்கள் மற்றும் இலகுரக வாகனங்கள் வலது பக்கம் திரும்பி டேம்ஸ் சாலை வழியாக செல்ல தடை செய்யப்பட்டுள்ளது. இவை இடது பக்கம் திரும்பி அண்ணா சாலை, ஸ்பென்சர் சந்திப்பில் யு-திருப்பம் செய்து அண்ணாசாலை, டேம்ஸ் சாலை வழியாக செல்ல வேண்டும்.

அண்ணாசாலை - வாலாஜா சாலை சந்திப்பில் இருந்து வரும் அனைத்து வாகனங்களும் வழக்கம் போல ஜி.பி.சாலையில் அனுமதிக்கப்பட்டு ராயப்பேட்டை மணிக்கூண்டு வழியாக செல்ல முடியும்.

அதேநேரம், அண்ணாசாலை - வாலாஜா சாலை சந்திப்பில் இருந்து வரும் வாகனங்கள் ஜி.பி.சாலை சந்திப்பில் யு திருப்பம் செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.

இவை நேராக அண்ணாசாலை, ஸ்பென்சர் சந்திப்பில் யு திருப்பம் செய்து அண்ணாசாலை, டேம்ஸ் சாலை வழியாக செல்ல அனுமதிக்கப்படும். மேலும் ஸ்பென்சர் சந்திப்பில் இருந்து ஜி.பி.சாலை நோக்கி வரும் வாகனங்கள் டேம்ஸ் சாலை, பிளாக்கர்ஸ் சாலை வழியாக சென்று ஜி.பி. சாலையை அடையலாம். போக்குவரத்து மாற்றங்களுக்கு வாகன ஓட்டிகள் ஒத்துழைப்பு தர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கொத்தடிமை தொழிலாளர் குறித்து ஆட்சியர் விழிப்புணர்வு கூட்டம்

**காஞ்சிபுரம்**
காஞ்சிபுரம் மாவட்டத்தில் குழந்தை தொழிலாளர்கள் மற்றும் கொத்தடிமை தொழிலாளர்கள் குறித்து அரிசி ஆலை உரிமையாளர்களுடனான விழிப்புணர்வுக் கூட்டம் ஆட்சியர் கலைச்செல்வி தலைமையில் நேற்று நடைபெற்றது.

அப்போது அவர் பேசும்போது, மாவட்டத்தில் இதற்கு முன்பு குழந்தை தொழிலாளர்கள் மற்றும் கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டே இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குழந்தை தொழிலாளர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்களை ஒழிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கெ.வெங்கடேஷ், தொழிலாளர் பாதுகாப்பு கண்காணிப்பாளர் சார்லஸ் சாம் ராஜதுரை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஆர்.சக்தி காவியா உட்பட பலர் பங்கேற்றனர்.

## திருத்தணி பகுதி பட்டா மாறுதல் இணையத்தில் விண்ணப்பிக்கலாம்

**திருவள்ளூர்**
திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் நடைபெற்று வந்த நகர நிலவரித் திட்ட பணிகள் முடிவுற்று, இணையவழிப்படுத்தும் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து நகர அளவை ஆவணங்கள் இணையவழி சேவைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. ஆகவே, திருத்தணி நகர அளவை சார்ந்த உட்பிரிவு மற்றும் உட்பிரிவு அல்லாத பட்டா மாறுதலுக்கான விண்ணப்பங்களை இணைய வழியில் பெறும் வகையில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் திருத்தணி நகர எல்லைக்குட்பட்ட தங்களது நிலத்துக்கான உட்பிரிவு மற்றும் உட்பிரிவு அல்லாத பட்டா மாறுதலுக்கு இ-சேவை மையம் மூலம் இணைய வழியில் விண்ணப்பித்து பட்டா பெறலாம் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் தெரிவித்துள்ளார். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை கத்தீட்ரல் சாலையில்

# ரூ.25 கோடியில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா

## ஆலோசகரை தேர்வுசெய்ய ஒப்பந்தம் கோரியது அரசு

**சென்னை**
சென்னை கத்தீட்ரல் சாலையில் ரூ.25 கோடியில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா அமைப்பதற்கான ஆலோசகரைத் தேர்வு செய்வதற்கான ஒப்பந்தம் வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை கத்தீட்ரல் சாலையில் அரசு தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமாக 23 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலம் கடந்த 1910-ல் தோட்டக்கலை சங்கத்துக்கு வழங்கப்பட்டது. ஆனால் காலப்போக்கில், இந்த நிலம் தனியார் ஆக்கிரமிப்புக்கு மாறியது.

கடந்த 1989-ம் ஆண்டு அப்போதைய முதல்வர் கருணாநிதி, 17 ஏக்கர் நிலத்தை மீட்டார். இதையடுத்து, அப்பகுதியில் செம்மொழிப் பூங்கா கடந்த 2009-ல் உருவாக்கப்பட்டது.

மீதமுள்ள நிலம் தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி என்பவரிடம் இருந்தது. இந்நிலையில், திமுக ஆட்சி ஏற்பட்ட பின்னர், மீதமுள்ள 6 ஏக்கர் நிலம் கடந்த ஜூன் மாதம் மீட்கப்பட்டது.

இந்நிலையில், கத்தீட்ரல் சாலையில் உள்ள செங்காந்தள் பூங்கா அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில், ரூ.25 கோடியில் கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா அமைக்கப்படும் என கடந்த ஆக.15-ம் தேதி சுதந்திர தின உரையில் முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

இந்நிலையில், இந்த பூங்காவுக்கான ஆலோசகர்களை தேர்வு செய்வதற்கான ஒப்பந்தத்தை தமிழக அரசு கோரியுள்ளது. செப்.18-ம் தேதி ஒப்பந்தத்துக்கான கடைசி நாள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்திய யூனியன் வங்கியின் பல்வேறு மண்டலங்கள் சார்பில் நாடு முழுவதும் 32 நகரங்களில், 8 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 'யூ ஜீனியஸ் 2.0' என்ற பெயரில் தேசிய விழிப்புணர்வு விநாடி-வினா போட்டி நடத்தப்படுகிறது. சென்னையில் ராஜா அண்ணாமலை மன்றத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் 128 பள்ளிகளைச் சேர்ந்த 600 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். பூக்கடை போலீஸ் துணை ஆணையர் ஷ்ரேயா குப்தா, உதவி ஆணையர் பாலகிருஷ்ண பிரபு ஆகியோர் தொடங்கி வைத்தனர். வங்கியின் பொது மேலாளர் ஆர்.விஸ்வேஸ்வரன், மண்டல துணைத் தலைவர்கள் ஜி.முருகன், பி.டி.வி.சர்மா, துணை பொது மேலாளர்கள் எஸ்.சுப்பிரமணியன், எஸ்.ஜாஸ்மின் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# இஸ்ரோவுக்கு இணைய பாதுகாப்பு

## குயிக் ஹீல் டெக்னாலஜீஸ் பெருமிதம்

**சென்னை**
இஸ்ரோ சாதனையைப் பாராட்டும் அதே வேளையில், இஸ்ரோவுக்கு இணையப் பாதுகாப்பை வழங்கி வருவதில் பெருமிதம் கொள்வதாக குயிக் ஹீல் டெக்னாலஜீஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.



SEQRITE
Quick Heal Group

இதுகுறித்து குயிக் ஹீல் டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் இணை நிர்வாக இயக்குநர் சஞ்சய் கட்கர் கூறுகையில், "இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) மற்றும் நாடு சாதித்துள்ளதைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். எங்களின் 'குயிக் ஹீல்' மற்றும் 'செக்யூரைட்' ஆகியவை நீண்டகாலமாக இணையப் பாதுகாப்பு பங்காளிகளாக இருந்து வருகின்றன, நாடு முழுவதும் உள்ள இஸ்ரோவுக்கான ஏராளமான தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சொத்துகளை விடாமுயற்சியுடன் பாதுகாத்து வருகிறோம். இது உண்மையில் எங்களுக்கு மிகப்பெரிய பெருமை தரக்கூடிய அம்சமாகும்.

இஸ்ரோ மற்றும் பல்வேறு முக்கியமான அரசு நிறுவனங்களின் இணையப் பாதுகாப்பு எல்லைகளைப் பாதுகாப்பதில் பெருமிதம் கொள்கிறோம், இதுபோன்ற வரலாற்றுப் பணிகளில் கவனம் செலுத்த அவர்களுக்கும் நமது தேசத்துக்கும் குயிக் ஹீல் உதவுகிறது" என்றார்.

திருக்கழுகுன்றம் வட்டத்தில் அரசுத் திட்டங்கள் குறித்து

# செங்கை கண்காணிப்பு அலுவலர் ஆய்வு

**செங்கல்பட்டு**
திருக்கழுகுன்றம் வட்டத்துக்கு உட்பட்ட ஊராட்சிகளில் மாவட்ட கண்காணிப்பாளரும், வேளாண்மை உழவர் நலத் துறை, வேளாண் உற்பத்தி ஆணையரும், அரசு செயலாளருமான சி.சமயமூர்த்தி, பல்வேறு அரசுத்துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து, மாவட்ட ஆட்சியர் ஆ.ர.ராகுல்நாத்துடன் ஆய்வு மேற்கொண்டார்.



மேலப்பட்டு கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள வட்டார தாவர தோட்டத்தை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சி.சமயமூர்த்தி, ஆட்சியர் ஆ.ர.ராகுல்நாத் ஆய்வு செய்தனர்.

இதில், திருக்கழுகுன்றம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இணையதளத்தில் பட்டா மாற்றம், பட்டா பதிவேற்றம், நிலுவையில் உள்ள பட்டாக்களை விரைவில் பதிவேற்றம் செய்வது குறித்தும், பட்டா வழங்க கோரிய இருளர் இன மக்களுக்கு விரைவில் இணையவழி பட்டா வழங்க வேண்டும் எனவும் அதிகாரிகளை மாவட்ட கண்காணிப்பாளர் அறிவுறுத்தினார். இதையடுத்து, திருக்கழுகுன்றம் அரசு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டு நோயாளிகளிடம் சிகிச்சைகள் வழங்குவது குறித்து கேட்டறிந்தார்.

பின்னர், கொத்திமங்கலம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இருளர் வீடுகள் 2022-23 திட்டத்தில், தலா ரூ.4.37 லட்சம் மதிப்பில் இருளர் மக்களுக்காக கட்டப்பட்டு வரும் 18 வீடுகளை பார்வையிட்டார். மேலும், இருளர் இன மக்களிடம் கர்ப்பிணிகளுக்கான மருந்து மாத்திரைகள் வழங்கப்படுகிறதா என்றும், மருத்துவ முகாம், ஆதார் அட்டை, குடிநீர் வசதி, பேருந்து நிலையம் போன்ற அடிப்படை வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார். பின்னர், இருளர் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் 2023-24 கீழ் ரூ.7.43 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் முதல்வர் காலை உணவு திட்டத்துக்கான சமையல் கூட கட்டிட பணிகள் மற்றும் அப்பள்ளியில் மதிய உணவு தயாரிக்கப்பட்டு வரும் சமையல் கூடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலப்பட்டு கிராமத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2021-22-ம் ஆண்டில் ரூ.10 லட்சம் மதிப்பில் பசுமை வலை பாதுகாப்புடன் கூடிய, வட்டார தாவர தோட்டம் அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு கண்காணிப்பு அலுவலர், அதிகளவில் மரங்கள் மற்றும் செடி வகைகளை பயிரிடுமாறும், இதற்கான விதைகளை, தோட்டக்கலைத் துறையின் மானியத் தின் மூலம் பெற்று பயன்படுத்த மாறும் அறிவுறுத்தினார். இதே போல், அப்பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அரசு திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் திட்டத்தை தற்போதைய நிலை குறித்து ஆலோசிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில், மாவட்ட எஸ்பி சாய் பிரனீத், சார் ஆட்சியர் லட்சுமிபதி, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்த் குமார் சிங், மாவட்ட வருவாய் அலுவலர் பி.சுபா நந்தினி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இந்து பாலா ஆகியோர் பங்கேற்றனர்.

[illegible]

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

**தமிழ்நாடு அரசு**
**நிதித் துறை, சென்னை -9**

கலைஞர் 100 1924 - 2023

நாள் : 25.08.2023

**செய்தித்தாள் அறிவிப்பு**

தமிழ்நாடு அரசு நிதித்துறையின் **20.09.2013** ஆம் நாளிட்ட **254(L)/W&M-II/2013** அறிவிக்கையின் வரையறைகளின் படி வழங்கப்பட்ட **9.8% தமிழ்நாடு மாநில வளர்ச்சி கடன் 2023** நிலுவைத் தொகையானது **25.09.2023 அன்று 24.09.2023** ஆம் நாள் உட்பட்ட உரிய நாளது வரையிலான வட்டித் தொகையுடன் திருப்பிச் செலுத்தப்படும் என்று பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது. யாதொரு மாநில அரசால், 1881 ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் கீழ், மேற்சொன்ன நாளினை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருப்பின், அந்த மாநிலத்தின் தொகை செலுத்தும் அலுவலகங்களால், முந்தைய அலுவலகப் பணிநாளில் திருப்பிச் செலுத்தப்படும். **25.09.2023** ஆம் நாளிலிருந்தும் அதற்கு பின்னரும் இக்கடனுக்கு வட்டித் தொகை சேராது.

2. 2007 ஆம் ஆண்டு அரசு கடன் பத்திரங்களின் ஒழுங்குமுறை விதிகளிலுள்ள 24(2) மற்றும் 24(3) ஆம் துணை ஒழுங்குமுறை விதிகளின்படி, பொது துணை பேரேட்டு படிவத்தில் அல்லது மூலப் பொது துணைப் பேரேட்டுகணக்கில் அல்லது பங்கு முதல் சான்றிதழில், அரசு கடன் பத்திரங்களை வைத்திருக்கும் பதிவு பெற்ற நபர் ஒருவருக்கு, அவருடைய வங்கி கணக்கில் அல்லது மின்னணு பதிவு மூலம் நிதிகளை வரவு வைக்கும் வசதியுள்ள யாதொரு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் அவருடைய வரவுக் கணக்கில் உரிய விவரங்களை சேர்த்து, தொகை செலுத்துவதற்கான ஆணை வழங்குவதன் மூலம் முதிர்வுத் தொகை வழங்கப்படும். கடன் பத்திரங்களை பொறுத்தமட்டில், தொகை செலுத்தும் நோக்கத்திற்காக, நேர்விற்கேற்ப அசல் சந்தாதாரர் அல்லது இத்தகைய அரசு கடன் பத்திரங்களை வைத்திருப்பவர் வட்டித்தொகை செலுத்துவதற்காக முகப்பிடப்பட்டுள்ள / பதிவு செய்யப்பட்டுள்ள வங்கிக்கு அல்லது கருவூலத்திற்கு மற்றும் சார் கருவூலத்திற்கு அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைக்கு நேர்விற்கேற்ப அவர்களுடைய வங்கிக் கணக்கின் உரிய விவரங்களை அளிக்க வேண்டும்.

3. இருப்பினும், வங்கிக் கணக்கில் உரிய விவரங்கள் இல்லாத / மின்னணு மூலம் நிதிகளை வரவு வைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படாத நேர்வில், உரிய நாளில் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக, **9.8% தமிழ்நாடு மாநில வளர்ச்சிகடன், 2023** தொடர்பான கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள், அவர்களுடைய கடன் பத்திரங்களை, 20 நாட்களுக்கு முன்னதாகவே, பொதுக் கடன் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்காக கொடுக்கப்படும் கடன் பத்திரங்களின் பின் பக்கத்தில், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரியமுறையில் எழுதி கையொப்பமிட வேண்டும்.

**"சான்றிதழுக்குரிய அசல் தொகை பெறப்பட்டது"**

4. பாரத ஸ்டேட் வங்கியின் கிளை ஒன்றில் கருவூலப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களில், இக்கடன் பத்திரங்கள், பங்கு முதல் சான்றிதழ்கள் வடிவில் இருக்குமாயின், சம்பந்தப்பட்ட வங்கியின் கிளையில் தான் ஒப்படைக்க வேண்டுமே தவிர கருவூலத்திலோ அல்லது சார் கருவூலத்திலோ ஒப்படைக்கக்கூடாது என்பதை குறிப்பாக கருத்தில் கொள்ள வேண்டும்.

5. கடன் தொகை திருப்பிச் செலுத்தக் கோரி, கடன் பத்திரங்கள் முகப்பிடப்பட்டுள்ள இடங்கள் நீங்கலாக பிற இடங்களில் தொகையைப் பெற விரும்புவோர், கடன் பொறுப்பைத் தீர்க்கும் வாசகத்தை அப்பத்திரங்களின் பின்புறம் உரியவாறு எழுதி கையொப்பமிட்டு, சம்மந்தப்பட்ட பொதுக்கடன் அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மற்றும் காப்புறுதி அஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். தமிழ்நாடு மாநிலத்தில், அரசு கருவூலகப் பணிகளை மேற்கொள்ளுகின்ற யாதொரு கருவூலம் / சார் கருவூலம் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைகளில் செலுத்தத் தக்க கேட்புக் காசோலை ஒன்றை வழங்குவதன் மூலம், பொதுக் கடன் அலுவலகம், தொகை வழங்கும்.

**த. உதயச்சந்திரன்**
**அரசு முதன்மை செயலாளர்**
**நிதித் துறை, சென்னை- 09.**

செ.ம.தொ.இ./ 980 /வரைகலை/2023

**BHARTIYA INTERNATIONAL LIMITED**

**Regd.Office:** 56/7, Nallambakkam Village (Via Vandalur), Chennai-600 048, Tamil Nadu
**CIN-** L74899TN1987PLC111744 **Tel:** +91-9551050418-21
E-mail: shares@bhartiya.com Website: www.bhartiya.com

**INFORMATION REGARDING 36th ANNUAL GENERAL MEETING TO BE HELD THROUGH VIDEO CONFERENCE ("VC")/ OTHER AUDIO-VISUAL MEANS ("OAVM")**

**Annual General Meeting:**

Shareholders may note that the **36th Annual General Meeting ("AGM") of the Company will be held through VC/OAVM on Friday, 29th September, 2023 at 11.00 a.m. (IST),** in compliance with all the applicable provisions of the Companies Act, 2013 and Rules issued thereunder and the Securities and Exchange Board of India ("SEBI") (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 read with General Circular Nos. 20/2020 dated 5th May, 2020, 10/2022 dated 28th December, 2022 issued by the Ministry of Corporate Affairs ("MCA") and Circular Nos SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 dated 13th May, 2022, SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4 dated 5th January, 2023 issued by SEBI, along with other applicable Circulars issued in this regard by the MCA and SEBI, to transact the business(es) that will be set forth in the Notice of the AGM.

In compliance with the above Circulars, the Company will be sending electronic copies of the Notice of the AGM and Annual Report for the financial year 2022-23 to all the shareholders whose email addresses are registered with the Company/Registrar and Share Transfer Agent/Depository Participant(s) ("DP"). The Notice of the 36th AGM and Annual Report for the financial year 2022-23 will also be made available on the Company's website www.bhartiya.com, on the website of Stock Exchanges where the equity shares of the Company are listed, BSE Limited at www.bseindia.com, National Stock Exchange of India Limited at www.nseindia.com and on the website of National Securities Depository Limited ("NSDL") at www.evoting.nsdl.com.

**Voting information:**

Remote e-Voting facility ("remote e-Voting") is provided to the shareholders to cast their vote on resolutions which are set out in the Notice of the AGM. Shareholders have the option to either cast their vote using the remote e-Voting facility prior to the AGM or e-Voting during the AGM. Detailed Instructions for remote e-Voting/ e-Voting during the AGM will be provided in the Notice of the AGM to the shareholders of the Company.

In case of any queries, you may refer the Frequently Asked Questions ("FAQs") for shareholders and e-voting user manual for shareholders available at the download section of www.evoting.nsdl.com or call on nos.: 022-4886 7000 and 022 - 2499 7000 or send a request to Mr. Amit Vishal, Assistant Vice President, NSDL or Ms. Pallavi Mhatre, Senior Manager, NSDL at evoting@nsdl.co.in.

Shareholders who wish to register their e-mail address and/or update bank account mandate to receive company communication/dividend, are requested to please follow the following instructions:

| | |
|---|---|
| For shares held in electronic form | Register/ update the details in your demat account, as per the process advised by your DP; and |
| For shares held in physical form | Register/update the details in the prescribed Form ISR-1 with Registrar and Transfer Agent of the Company, Mas Services Limited ("MAS"), Pursuant to the SEBI Circular No. SEBI/HO/MIRSD/MIRSD-PoD-1/P/CIR/2023/37 dated 16th March, 2023, the company has sent letters to the shareholders holding shares in physical form to furnish the KYC details which are not registered in their respective folios. |

Further, the shareholders can also access the relevant forms on Company's website at https://bhartiyafashion.com/invester-relations.html.

Alternatively, you may register your email address with Company/MAS on temporary basis to ensure the receipt of Annual Report for the financial year 2022-23 by writing to company/ MAS shares@bhartiya.com / info@masserv.com.

The above information is being issued for the information and benefits of all the shareholders of the company and in compliance with the applicable MCA and SEBI circulars(s).

For **Bhartiya International Ltd**
Sd/-
**Yogesh Kumar Gautam**
**Company Secretary and Compliance Officer**

**Date:** 25th August, 2023
**Place:** Gurugram, Haryana

**வரி விளம்பரங்கள்**

**சுய செய்தி**

**பெயர்மாற்றம்**

I, Kasthuri Venkatesalu W/O, Sathiya Srinivasan R/o 98/2 , Vs Mudali Street, Saidapet, Chennai-600015 have changed my name to Kasthuri Sathiya Srinivasan for all purposes.

I Rithik Solomon N Prabhakar Victor S/O, N Prabhakar Victor R/o No:12:41, Dr Jj Nagar, Mugappair East, Chennai, Tamil Nadu, India. Pin:600037 have changed my name to Rithik Solomon .

I, Shireen Banu Mohammed Hussain, D/O Rahamathulla Sait Khader, R/O 4A, Kamarajar Srt, Amet Clg, Kanathur Reddy, Kuppam, Kanchipuram 603112 have changed my name as Shireen Banu Rahamathulla vide afdvt dtd 23/08/23

**தொழில்**

**நிதி சேவைகள்**

Money formula 15x15x15 to get over Rs.1 crore. Please contact AMFI registered Mutual Fund Distributor, Manivarma on mobile 9527121485

**வாடகை**

**வாடகைக்கு**

RCC Building G+1 6000+7700 sqft with Goods Lift & Parking Facility @ Pammal Ct: 9840566488 Email: nsultan344@gmail.com

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: K Asokan (Editor responsible for selection of news under the PRB Act).